**தலைப்பு 116 – வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 116- வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வர்த்தக அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 2,157,470 ஆன மோட்டார் வாகனமொன்று நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,157,470 பெறுமதியான மோட்டார் வாகனம் தொடர்பான தகவல் நிதி அமைச்சிற்கு 2021 திசெம்பர் 31 வரையில் கிடைக்காமையால் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் அப் பெறுமதி சேர்க்கப்பட்டிருக்காததுடன் 2023 ஆம் வருடத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் முறையாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சிற்கு சொந்தமான 02 வாகனங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு ரூபா 15,940,000 ஆன பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் (CIGAS அறிக்கையில்) உள்ளடக்கப்பட்டிருந்தும், அது இராஜாங்க அமைச்சிற்கு சொந்தமாக இருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்கள் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கு சொந்தமானவை என்பதுடன் தற்போது கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இராஜாங்க அமைச்சிற்கு சொந்தமாக இருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலச் சான்றுகள் காணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 07 செலவு விடயங்களுக்கான குறைநிரப்பு ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் அவற்றின் சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக 48 சதவீதம் முதல் 100 சதவீத வரையான வீச்சைக் கொண்டிருந்தது. மேலும், அதில் நூற்றுக்கு நூறு வீதம் சேமிப்பு காணப்பட்ட 116-01-01-2001 ஆம் இலக்க செலவு விடயத்திற்கான மதிப்பீட்டு ஏற்பாடொன்று இல்லாதிருந்ததுடன் குறைநிரப்பு ஏற்பாடுகள் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவைப்பாடு சரியான முறையில் திட்டமிடப்பட்ட பின்னர் குறைநிரப்பு ஏற்பாடுகள் கோரப்படல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலவு விடயம் 116-01-02-1409 இன் கீழ் சேமிப்பை விஞ்சியதாக பொறுப்புக்கள் ரூபா 531,168 ஆக காணப்பட்டதுடன் இது தொடர்பாக நி.பி. 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த செலவு விடயத்தின் கீழ் திசெம்பர் மாதத்தின் பட்டியல்கள் அடுத்து வரும் வருடத்தின் சனவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் குறிப்பிட்ட கணக்காண்டில் ஏற்பாடுகளை விஞ்சியதாக பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்த போதிலும், வருடத்திற்குள் ஏற்பாடுகள் விஞ்சப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 1646 | | | - |
| | | அனைத்து வாகனங்களுக்காகவும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 07 குழாம் வாகனங்களுக்கான 21 மாதங்களுக்கான ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அவற்றில் 04 வாகனங்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக இணைக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் குழாம் சாரதிகளுக்கு நாளாந்த ஓட்டக் குறிப்புக்களை உரிய மாதத்திற்காக முறையாகத் தினசரி பூரணப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை 3.1 ஆம் பந்தி | அனைத்து எரிபொருள் பரிசோதனைகளின் பின்னர் 12 மாத காலப்பகுதிக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் அளவிலான தூரமொன்று ஓட்டப்பட்ட பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான முக்கிய திருத்தங்களின் பின்னர் போன்ற விடயங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் வருடத்தில் அல்லது அதற்கு | மீளாய்வாண்டில் மற்றும் அதற்கு முன்னைய வருடத்தில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமையுடன் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையான எரிபொருள் தட்டுப்பாடொன்று மற்றும் எரிபொருளைப் பெறுதல் தொடர்பாக காணப்பட்ட வரிசை முறை மற்றும் QR குறியீட்டு முறைமைகளின் அடிப்படையில் அதிகபட்சம் 20 லீற்றர் வாரத்திற்கு வழங்கப்பட்ட காரணத்தால் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னர் வர்த்தக அமைச்சின் 7 குழாம் வாகனங்களுக்கான எரிபொருள் எரிப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட வில்லை. | 2023 ஆம் வருடத்தில் குழாம் வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | எதிர்வரும் வருடத்தின் பெறுகைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பின்னர் பிரதி உரிய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக வர்த்தக அமைச்சின் பெறுகைத் திட்டம் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் வருடத்திற்கான பெறுகைத்திட்டம் 2023 சனவரி 04 ஆம் திகதி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**(அ) அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 மே 12 ஆம் திகதி முதல் 2021 மார்ச் 22 ஆம் திகதி வரையில் அமைச்சின் செயலாளரின் ஒருங்கிணைப்பு செயலாளராக நியமிக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த சம்பளம் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகளாக முறையே ரூபா 1,258,526 மற்றும் ரூபா 1,564,328 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் கடமைக்கு சமூகமளித்தல் தொடர்பாக உள்வருகை, வெளிச்செல்லல் பற்றிய பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின ஒருங்கிணைப்புச் செயலாளராக பணியாற்றும் இரண்டு உத்தியோகத்தர்களினதும் உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவேடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அப் பதிவேடு நிர்வாகப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவேடு மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | KR 1491 ஆம் இலக்க குழாம் வாகனத்திற்காக மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் எரிபொருள் வழங்கப்பட்ட போதிலும் அவ்வாகனத்திற்கான ஓட்டக் குறிப்புக்கள் 07 மாதங்களுக்கு மட்டுமே பெறப்பட்டிருந்தன. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓட்டக் குறிப்புக்களில் அடங்கியிருந்த விபரங்களின் பிரகாரம் அவ்வாகனம் அக்காலப் பகுதியில் செயலாளரின் உத்தியோபூர்வ மனை மற்றும் செயலாளரின் கடமைக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 29 ஆம் திகதிய 13/2008/(VI) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் பிரகாரம் மாதத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் லீற்றரின் அளவுக்கான மாதாந்த எரிபொருள் படியான ரூபா 26,620 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போது குழாம் வாகனத்திற்கான எரிபொருள் கட்டளை மூலம் ரூபா 156,470 பெறுமதியான 1,006 லீற்றர் பெட்ரோல் அளவொன்று செயலாளரின் கடமைக்காக வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதற்கான பதிலை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 உத்தியோகத்தர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 135,000 பெறுமதியான முற்பணத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் முற்பணம் பெறப்பட்ட தேவை நிறைவேற்றப்படாது வழங்கப்பட்ட தொகையை மீண்டும் தீர்ப்பனவு செய்வதற்கு 09 நாட்கள் மற்றும் 36 நாட்களுக்கிடையிலான காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முற்பணத் தொகை பெறப்பட்டதன் பின்னர் தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு பதவியணியினருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

அமைச்சின் நோக்கங்களுக்கிடையே கீழே காண்பிக்கப்படுகின்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய சந்தை கொள்கையின் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் உரித்தை பாதுகாக்கும் வகையில் சந்தை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாக சுங்கவரி கொள்கையை அமுல்படுத்துதல் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்காக வரிச் சலுகை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல். | உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் உரித்தை பாதுகாக்கும் வகையில் சந்தை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக சுங்கவரி கொள்கையை அமுல்படுத்துதல் மற்றும் வரிச்சலுகைகளை வழங்குவது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் நிதியமைச்சின் மூலம் செய்யப்படுகின்றதுடன் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வரிச்சலுகைகளின் அடிப்படையில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றமை மற்றும் இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சி திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டங்கள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதுடன் நுகர்வோர் அதிகார சபையானது நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சந்தை நடத்தையைக் கட்டுப்படுத்துவதில் பணியாற்றியுள்ளது. தேசிய வர்த்தகக் கொள்கையொன்றின் ஊடாக மேற்படி விடயங்களை அடைவதற்குத் தேவையான செயற்பாடுகளை வர்த்தக அமைச்சு மேற்கொண்டு வருகின்றது | பிரதான நோக்கம் அடையப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குரிய தரவு முறைமையொன்றை பேணிச் செல்லல், அந்த தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் மற்றும் அந்த தரவுகளை வெளித்தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தும் பொறிமுறையொன்றை தயாரித்தல். | அத்தரவு முறைமையைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பிரதான நோக்கம் அடையப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்ட பிரதான செயற்பாடான இலங்கையில் 8000 மெட்ரிக் தொன் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பராமரித்தல் தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 50 மில்லியன் மற்றும் முன்னைய வருடத்தில் ரூபா 200 மில்லியன் ஒதுக்கங்களாக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும், இது தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை பணிகளும் முறையாக செய்யப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை வைத்துக் கொள்வதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு அரச வணிக கூட்டுத்தாபனத்தின் மூலம் அரிசி இறக்குமதி செய்து சதொச ஊடாக நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பட்டது. அதன் மூலம் நாட்டில் அரிசி சுழற்சியை ஏற்படுத்தி அரிசி விலையை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் பங்களிப்புச் செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் 8000 மெட்ரிக் தொன் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை வைத்துக் கொள்வதற்காக வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் மூலம் ரூபா 50 மில்லியன் ஆன நிதியேற்பாடு உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 8000 மெட்ரிக் தொன் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை வைத்துக் கொள்வதற்கு இந்த ரூபா 50 மில்லியன் நிதியேற்பாடு போதுமானதாக இல்லாததால் , அத்தொகை | அமைச்சின் மேற்பார்வை பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. மேலும் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 3/2022 இன் பிரகாரம் செலவகள் மட்டுப்படுத்தப்பட்டதாலும் இவ்வாறு ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டது. | |
| (ஆ) | மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ், மிஹிந்தலை வர்த்தக நகர திட்டம், நுவரெலியா உயிரியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் வெளிநாட்டு மொழி பல்கலைக்கழகத்தை நிறுவுதல் ஆகிய 3 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மகாபொல நம்பிக்கைப்பொறுப்பு சபையின் தீர்மானத்தின் பிரகாரம், இத்திட்டம் தொடர்பான காணிகள் கையளிக்கப்படாமை மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்படாமையினால் இத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. மேலும், மிஹிந்தலை பாரிய வர்த்தக நகரத் திட்டம் தொடர்பான அடிப்படைப் பணிகளுக்காக ரூபா 1,770,000 செலவிடப்பட்டிருந்தது. | நிதியத்தின் தற்போதைய நிதி நிலைமையின் கீழ், லலித் அததுலத் முதலி மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பணத்தை மூலதன முதலீடுகளுக்காக பயன்படுத்துவதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்துள்ளதுடன் 2022 ஒக்டோபர் 25 அன்று நடைபெற்ற அமைச்சர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டதால், இந்த திட்டங்களை இடைநிறுத்த நம்பிக்கைப்பொறுப்பு குழு முடிவு செய்துள்ளது. | செலவினங்கள் செய்யப்படுவதற் முனனர் நிலம் கையகப் படுத்துதல் மற்றும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்குரிய 13 களஞ்சியங்களை நவீனமயப்படுத்துதல். | | |
| (i) ரூபா 22,500,000 ஆன மதிப்பீடொன்றுடன் இச்செயற்திட்டத்திற்காக 2021 இல் அமைச்சினால் ரூபா 50,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத் தாபனத்தினால் 13 களஞ்சியங்களை நவீனமயப்படுத்து வதற்காக ரூபா 82,525,681 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 62,490,367 செலவினம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் இந்த சகல களஞ்சியங்களையும் நவீனமயப் படுத்துவதற்கான பணிகள் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 மே 16 ஆந் திகதி வரையில் 04 களஞ்சியங்களின் பணிகள் நிறைவடைந்தமைக்கான செயல்முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையில் காணப்பட்டதால் இது தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை பணிகள் முறையாக செய்யப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 11 களஞ்சியசாலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 05 களஞ்சியசாலைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. தனியாருக்கு குத்தகை அடிப்படையில் இரண்டு களஞ்சியசாலைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, மேலும் மூன்று களஞ்சியசாலைகளை லங்கா சதொச நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகள் 5% - 20% வரையில் உள்ளன. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்பார்வை பணிகள் சரியான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேலும் 2020 மார்ச் 18 இல் 06 களஞ்சியசாலைகளின் நவீனமயமாக்கல் பணிகள் நிறைவடைந்து மேலும் 07 களஞ்சியசாலைகளின் நவீனமயமாக்கல் முன்னேற்றம் 2022 மே வரையில் 5 முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதால் அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 20,035,264 ஆன தொகை 2023 ஏப்ரல் மாதம் மீண்டும் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இதன் செயல்முன்னேற்றம் தொடர்பான மீளாய்வொன்று அல்லது அத தொடர்பான முழுமையான அறிக்கையொன்று அமைச்சிற்கு கிடைக்கவில்லை. | 11 களஞ்சியசாலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 05 களஞ்சியசாலைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. தனியாருக்கு குத்தகை அடிப்படையில் இரண்டு களஞ்சியசாலைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, மேலும் மூன்று களஞ்சியசாலைகளை லங்கா சதொச நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகள் 5% - 20% வரையில் உள்ளன. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்பார்வை பணிகள் சரியான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரச வணிக (பல்வேறு) கூட்டுத்தாபனத்தினால் (கம்பனி) மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ரஜவாச லங்கா சதொச மெகா விற்பனை நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 47,725,462 ஆக இருந்ததுடன் இச் செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 22,924,908 ஆன தொகையொன்று அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தப் பிரகாரம் 2021 திசெம்பர் 06 வரை நிர்மாணம் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 வரையில் அப் பணிகள் நிறைவடைந்திருக்க வில்லை. | இச் செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 22,924,908 ஆன தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது அரசின் செலவில் அல்லாது லங்கா சதொச நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 செப்தெம்பர் 28 ஆம் திகதிய அமப/21/1543/313/053 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான தற்போது அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை அமைச்சிற்கு முறையாக கையேற்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையில் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 28 வாகனங்கள் ஏனைய அரச நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டு 15 வாகனங்கள் அமைச்சிற்கு கையகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்கள் 05 மாதங்கள் முதல் ஒரு வருட காலப்பகுதியில் திருத்தங்களுக்காக முகவர் நிறுவனங்கள் மற்றும் கராஜிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு வாகனம் ஒரு வருட காலமாக அமைச்சின் காணியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அரச செலவுகள் முகாமைத்துவத்தின் கீழ் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. | சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை இலக்கம் 05/2020 இன் 02 (ஆ) மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் திருத்தங்களுக் கான நடைமுறைகளைப் பூரணப்படுத்தல் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 மே 09 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட கலவர நிலைமை காரணமாக அமைச்சின் ரூபா 64,490,000 பெறுமதியான 03 வாகனங்கள் தீப்பிடித்து முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் அவ்வாகனங்களுக்காக கலவர காப்புறுதி செயயப்பட்டிருந்த போதிலும், காப்புறுதி நட்ட ஈடு இற்றை வரை பெறப்பட்டிருக்கவில்லை. | ஒரு வாகனத்திற்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. 03 மோட்டார் வாகனங்களுக்கான காப்புறுதி நடவடிக்கைகள் நாளது வரையாக்கப்பட்டு வருகின்றன. | உரிய காப்புறுதி இழப்பீடு பெறப்பட்டு வாகனங்கள் திருத்தங்களுக் காக அனுப்பப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கு 01 இன் கீழ் நிலைபேறான பொருளாதார முன்னேற்றமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சலுகை விலை முறைமையின் கீழ் வறுமையை குறைக்கும் நோக்கத்துடன் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர் களை ஊக்குவிப்பதற்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி மோல் உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு 100% சேமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான சரியான வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை இல்லாமையால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் முன்னேற்றம் 50% இற்கும் குறைவாகவே இருந்தது. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி மோல் உரிமையாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக 2021 ஆம் வருடத்தில் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த ரூபா 100 மில்லியன் தொகை உரிய மாகாணக் கூட்டுறவு ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. 2022 ஆம் வருடத்தில் ரூபா 30 மில்லியன் தொகையொன்று கம்பஹா மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டது. ஏனைய கோரிக்கைகள் இல்லாமையால் ரூபா 20 மில்லியன் தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கு 02 இன் கீழ் உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்படாதவாறு உணவு இருப்பு பராமரிக்கப்படுவதன் மேற்பார்வையின் கீழ் உணவுப் பாதுகாப்பு இருப்பு பராமரிக்கப்படுதல், பராமரிக்கப்பட்டு வருகின்ற அரிசி இருப்பிற்காக மீளாய்வாண்டில் ரூபா 50 மில்லியன் ஒதுக்கங்களும் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரை அந்த ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படவில்லை. அதனால் இலக்கிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் நிறைவேற்றப்படுவதற் கான செயற்திறன் எட்டப்படவில்வை என்பது அவதானிக்கப்பட்டது. | சார்க் வலய நாடொன்றாக வருடாந்தம் 8000 மெட்ரிக் தொன் அரிசி பராமரிக்கப்பட வேண்டும். என தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2022 ஆம் வருடத்தில் ரூபா 824 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் ரூபா 50 மில்லியன் ஒதுக்கங்களே வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 8000 மெட்ரிக் தொன் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பராமரித்துச் செல்வதற்காக ரூபா 50 மில்லியன் ஆன தொகை எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என்பதால் அந்த ஒதுக்கம் பயன்படுத்தப்படவில்லை. | இலக்குகளை அடைவதில் உள்ள தடைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அத தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 24 ஆம் திகதிய DMA /01-2019 (I) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து வருடத்திலும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் எதிர்வரும் வருடத்திற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரதி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் வருடத்திற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அத்திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்திற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2022.01.27 ஆம் திகதி முன்னாள் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அத்திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படல் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை. தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைப் பிகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |